நாள்- 25.09.2023

Case No.OS.59/2015 (DW1 )

DW.1- மண்ணு – வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இசையனூர் கிராமத்தில் ரோட்டு தெருவில் சுமார் 10 வருடகாலமாக குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பாக இசையனூர் கிராமத்தில் பஜனைகோயில் தெருவில் குடியிருந்தேன். நான் பிறந்த காலத்திலிருந்து இசையனூர் பஜனைகோயில் தெருவில்தான் குடியிருந்து வந்தேன். இசையனூரில் சுமார் 50 வீடுகள் இருக்கும். பஜனைகோயில் தெருவில் இருக்கும் அதிகம்பேர்கள் என் உறவினர்கள் என்று சொன்னால் சரியல்ல. பஜனைகோயில் தெருவில் எனது உறவினர்கள் யாரும் இல்லை. ஊர் நாட்டாண்மைக்காரம் வீரமணி ஆவார். கருணாகரன், முருகன், கன்னியப்பன் ஆகியோர்கள் தெரியுமா என்றால் அவர்கள் ரோட்டு தெருவில் இருக்கிறார்கள். கருணாகரன் என்ன உறவுமுறை என்றால் யார் என்றே எனக்கு தெரியாது. கன்னியப்பன் என்ன உறவுமுறை என்றால் எங்கள் ஊர்காரர், எந்த உறவும் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 ஆவணம் எப்போது வாங்கினேன் என்று தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.7, 9, 10,11,12,13,14, 15,16,19 ஆகிய ஆவணங்கள் என்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள எனது தரப்பு ஆவணங்கள் என்ன காரணங்களுக்காக தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது. வாதியை 1 முதல் 6 வரை பள்ளிக்கூடத்திற்கு அழைத்து சென்றேனா என்றால் இல்லை. வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. கூட்டுக்குடும்ப சொத்து வாதி மற்றும் 3ம் பிரதிவாதி ஆகியோர்கள் ஒன்றாக அனுபவித்து வந்தோம் என்று சொன்னால் இல்லை. ஊரில் மண்ணு என்று யாரும் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். என் பெயரில் உள்ள வேறொருவர் அப்பா பெயர் கண்ணன் ஆவார். அவர் பழைய காலணியில் இருந்தார்கள். பஜனைகோயில் தெருவிலும், ரோட்டு தெருவிலும் மண்ணு என்ற பெயரில் யாரும் இல்லை என்றால் பஜனைகோயில் தெருவில் மண்ணு என்பவர் இருக்கிறார். பஜனைகோயில் தெருவிற்கும், பழைய காலணிக்கும் சுமார் ஒரு கி.மீ. தூரம் இருக்கும். பழைய காலணியில் பஜனைகோயில் தெரு ஒன்று உள்ளது. என்னிடம் காட்டப்படும் ஆதார் கார்டில் உள்ள புகைப்படத்தில் இருப்பவர் யார் என்றே எனக்கு தெரியாது. அந்த ஆதார் கார்டில் உள்ள காஞ்சினா தகப்பனார் மண்ணு என்று உள்ளது என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதில் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து பற்றி எனக்கு தெரியாது. 3.8.2017 ல் வந்த அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தானது என் தந்தையார் கோபால் பெயரிலுள்ள கூட்டுக்குடும்ப சொத்து

என்று சொன்னால் சரியல்ல. நான்தான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூட்டுக்குடும்பம் என்று சொல்லி தற்போது மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இதுநாள்வரையில் தாவா சொத்தினை கூட்டுக்குடும்பமாக அனுபவித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் சட்டப்படி வாதிக்கு பாகம் பெற தகுதியானவர் என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணம் போலியானது என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதி சுமதி என்னுடைய மனைவி இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி காஞ்சனாதான் என் மனைவி என்று சொன்னால் சரியல்ல. வாதி, 2ம் பிரதிவாதிதான் சட்டப்படி வாரிசுகள் என்று சொன்னால் இல்லை. எனக்கும், 2ம் பிரதிவாதி காஞ்சனாவிற்கும் சட்டப்படி திருமணம் நடந்தது என்று சொன்னால் சரியல்ல. 4ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் எந்தவித பாகம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10, 11,12,13 தான செட்டில்மென்ட் எழுதுவதற்கு எனக்கு எந்த வித உரிமையில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 தானசெட்டில்மென்ட் ஆவணம் வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனக்கு எழுதிவைக்க அந்தவித அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதி திருமணப்பத்திரிக்கை பி.வா.சா.ஆ.2 வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1ம் திருமணம் 2ம் பிரதிவாதியான காஞ்சனாவினை செய்து கொண்டு நிலுவையில் இருக்கும்போது 2ம் திருமணம் 4ம் பிரதிவாதியை செய்து கொண்டது சட்டப்படியானது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி 4,5 தாவா சொத்தில் எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் பாகம் கிடைக்க தகுதியானவர் என்று சொன்னால் சரியல்ல. வாதி மகன் என்பதால் தாவா சொத்தில் பாகம் கிடைக்க தகுதியானவர் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.